**JUDICIAL FORM. 53**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII-Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF -CUM- JUDICIAL MAGISTRATE, KOTAGIRI**

**Case No. STC No. 359/2021**

**Deposition of Witness for Complainant PW1**

| | | |
|---|---|---|
| **Name** | **:** | **Shanmugam** |
| **Father's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provisions of act x of 1873 on this day of**

**01.11.2022** **Witness Signature :**

**குறுக்கு விசாரணை PW1 02.30 Pm to 02.45 Pm**

*1. நான் தோட்டம் வைத்துள்ளேனா என்றால், ஆமாம் சுமார் முக்கால் ஏக்கர் டீ தோட்டம் மற்றும் ஒரு வீடு கட்டும் அளவிற்கு நிலமும் வைத்துள்ளேன். எனக்கு எத்தனை குழந்தைகள் உள்ளனர் என்றால், ஒரு மகன் உள்ளார் தற்போது பி.ஜி படித்துவருகிறார். என் குடும்பத்தில் எத்தனை பேர் என்றால், 4 பேர் இருக்கிறோம். வேறு ஏதேனும் தொழில் செய்கிறேனா என்றால், 25 வருடமாக ஸ்டேசனரி கடை வைத்துள்ளேன். லட்சுமி ஸ்டோர்ஸ் என்று ராம்சந்த் பகுதியில் கடை வைத்திருக்கிறேன்.*

*2. லட்சுமி ஸ்டோர்ஸ்காக வங்கி கடன் வாங்கியுள்ளேனா என்றால், வாங்கியுள்ளேன் அந்த கடனை திரும்ப செலுத்தி முடித்துவிட்டேன்.*

என் மகன் படிப்பு செலவிற்காக கல்விகடன் வாங்கியுள்ளேனா என்றால், இல்லை. கடைகை வைத்து வேறு கடன் வாங்கியுள்ளேன். எதிரி அசோக் என்பவரின் குடும்ப விவரங்கள் தெரியுமா என்றால், தெரியும். எதிரி அசோக்கின் அப்பாவை தெரியுமா என்றால், தெரியும். காசோலை திருப்பியனுப்பப்பட்ட விவரத்தை எதிரியின் அப்பாவிடம் தெரிவித்தேனா என்றால், இல்லை. எதிரியின் குடும்ப உறுப்பினர்கள் யாரிடம் நான் காசோலை திருப்பப்பட்டது பற்றி சொல்லவில்லை என்றால், சரிதான்.

3. வழக்கு காசோலையை எதிரி அசோக்குமார் கைப்பட எழுதி எனக்கு கொடுக்கவில்லை என்று சொன்னால், அது தவறு. அவர் கைப்பட எழுதியதை நான் பார்க்கவில்லை என்றால், சரிதான். வழக்கு காசோலையை எங்கு, எப்போது, எப்படி எழுதினார் என்று எனக்கு தெரியாது என்றால், சரிதான். எதிரி ரூ.4,30,000/- தொகையை எப்போது என்னிடம் கடனாக கேட்டார் என்றால், பணம் வாங்குவதற்கு ஒரு மாதம் முன்பு வரையிலிருந்தே கேட்டுக்கொண்டிருந்தார். கடன் தொகையை குறிப்பிட்டு என்ன தேவைக்காக வாங்கினார் என்று எதிரி என்னிடம் சொன்னாரா என்றால், அவசர காரணம் என்று சொன்னார் என்ன காரணம் என்று நான் கேட்கவில்லை. நான் வட்டிக்கு பணம் கொடுப்பேனா என்றால், இல்லை.

4. பணத்தை கொடுத்த அன்றே பணத்தை திருப்பி தர கேட்டேனா என்றால், அன்றைய தினமே பணத்தை திரும்பி தர கேட்டு டிமாண்ட் செய்யவில்லை. எனது புகாரில் நான் அன்றே பணத்தை திருப்பி

தரகேட்டு டிமாண்ட் செய்தேன் என்று சொல்லியிருப்பது தவறு என்று சொன்னால், சரிதான். எதிரி என்னிடம் எந்த பணமும் வாங்கவில்லை என்று சொன்னால், சரியல்ல. எனக்கு எதிரி காசோலையே தரவில்லை என்று சொன்னால், சரியல்ல. காசோலையை முழுமையாக எழுதப்பட்டிருந்ததா என்றால், தெரியவில்லை. கையொப்பமும் தேதியும் இருந்தது நான் வாங்கிக்கொண்டேன். Ex.P1 காசோலையில் இருக்கும் கையெழுத்து எதிரியினுடையது இல்லை என்று சொன்னால், சரியல்ல.

5. வழக்கு காசோலையின் மொத்த புத்தகமும், வேறு சில வங்கி கணக்கு புத்தகங்களையும் எதிரி தொலைத்துவிட்டார், அது எனக்கு காவல் துறை மூலமாக தெரியவந்ததா என்றால், இல்லை. வழக்கு காசோலை 05.11.2020ம் தேதி தொலைந்துவிட்டதாக கோத்தகிரி காவல் நிலையத்தில் 28.11.2020ம் தேதி அன்றே புகார் கொடுத்திருப்பது எனக்கு தெரியுமா என்றால், இல்லை. மேலும் 28.11.2020ம் தேதி அன்றே எதிரி வங்கியிலும் காசோலை மற்றும் கணக்கு புத்தகம் தொலைந்து விட்டது சம்மந்தமாக புகார் கொடுத்தது எனக்கு தெரியுமா என்றால், தெரியாது.

6. கடன் தொகையை நான் வங்கியில் இருந்து எடுத்தேனா என்றால், இல்லை. நான் வருமான வரி முறையாக கட்டுகிறேனா என்றால், கட்டுகிறேன். கடன் தொகைக்கு 2020-2021 ஆம் நிதி ஆண்டில் வருமான வரியில் கணக்கு காட்டியுள்ளேனா என்றால், இல்லை, அவசர தேவைக்காக கடன் வாங்கியதால் நான் வருமான வரியில் காட்டவில்லை. கடன் கொடுத்ததாக

*சொல்லப்படும் 20ம் தேதி எத்தனை மணிக்கு கடன் கொடுத்தேன் என்றால், காலை 07.30 மணி முதல் 08.00 மணி வரை இருக்கும். கடன் வாங்கும்போது வேறு யாராவது எதிரியுடன் வந்தார்களா என்றால், வேறு யாரும் வரவில்லை.*

*7. நான் கடன் கொடுத்த விவரம் எனது குடும்ப உறுப்பினர்களுக்கு தெரியுமா என்றால், தெரியும். கடன் தொகையை பெற்றுக்கொண்டு எதிரி எங்கே சென்றார் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. எதிரி எனக்கு எத்தனை வருடமாக தெரியுமா என்றால், தெரியும், 10 ஆண்டுகளாக நல்ல பழக்கம் என்பதால் கடன் கொடுத்தேன். அன்றைய தினத்தில் எதிரி வீட்டில் என்ன நடந்தது என்று எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியன்று எதிரியின் தந்தை இறந்துவிட்டார் அதனால் அவர் வெளியே வர வாய்ப்பில்லை என்றால், தவறு. தந்தை இறந்த அன்று அதிகாலையில் மேட்டுப்பாளையத்திலிருந்து கோவை செல்லுவதற்காக தந்தை இறந்த சம்பவம் கேட்டு அவசரமாக திரும்பி வரும்போது எதிரியின் காசோலைகள் காணாமல் போய்விட்டதாகவும், அதை அதே மாதத்தில் போலிசில் புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது.*

*8. எதிரி தந்தையின் இறுதி சடங்கிற்கு நான் சென்றேனா என்றால், இல்லை. எதிரியின் தந்தை அனைவருக்கும் தெரிந்தாலும் கூட இறுதிசடங்கிற்கு ஏன் செல்லவில்லை என்றால், அந்த அளவிற்கு எனக்கு பழக்கம் இல்லை. வங்கியில் எனக்கு எப்போது மெமோ கொடுத்தார்கள்*

என்றால், 08.02.2021 அன்று கொடுத்தார்கள். பொதுவாக காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தால், அன்றைய தினமே திரும்ப வந்துவிடும் என்றால், வரும் ஆனால. வங்கியில் சம்மந்தப்பட்ட ஆட்கள் விடுமுறையில் இருந்தால் தாமதமாகும். . 10.02.2021 அன்று சென்ட்ரல் வங்கி சீல் உள்ளது, அதனால் 08.02.2021ம் தேதி திருப்பப்பட்ட மெமோ கொடுத்திருப்பார்கள் என்று சொல்வது நம்பும்படியாக இல்லை என்று சொன்னால், சரியல்ல. 08.02.2021ம் தேதி நான் வங்கியில் இருந்து மெமோ வாங்கவில்லை என்று சொன்னால், சரிதான்.

9. எனது புகாரிலும், முதல் சாட்சியத்திலும் 08.02.2021ம் தேதி மெமோ கொடுத்தார்கள் என்று சொல்லியிருந்தால், அது தவறு. எதிரி என்னை யாரென்றே தெரியாது, காணமல் போன காசோலையை வைத்து பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொல்லியுள்ளார் என்றால், அது தவறு. எதிரி பி.எஸ்.என்.எல் நிறுவனத்தில் நிரந்தர பணியாளர்தான் என்றால், சரிதான். மத்திய அரசு நிறுவனம் என்பதால் தினசரி வருகை பதிவேடு இருக்கும் என்றால், சரிதான். நான் எதிரியின் அலுவலக முகவரிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு அன்கிளைம்டு என்று திரும்ப வந்துள்ளது என்றால், சரிதான். நான் தபால் ஊழியரை தவறாக பயன்படுத்தி நான் எழுதி வாங்கியுள்ளேன் என்றால், சரியல்ல.

10. எதிரி அன்று பணியிலிருந்துள்ளார், அவருக்கு தபால் கொடுக்க எந்த தபால் ஊழியரும் முயற்சிக்கவில்லை என்றால், சரியல்ல. இரண்டு அறிவிப்புகளும் எதிரிக்கு கிடைக்கக்கூடாது என்பதற்காக தபால்

ஊழியரை தவறாக பயன்படுத்தி உள்ளேன் என்றால், சரியல்ல. 15.06.2022 அன்று 05.11.2021ம் தேதி காணாமல் போன காசோலையை சண்முகம் என்பவர் தற்போது நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், அதில் என்னுடைய கையொப்பம் மோசடி செய்யப்பட்டுள்ளதாகவும், அதில் 15.06.2021ம் தேதி காவல் நிலையத்தில் கொடுத்துள்ளது பற்றியும் அதனடிப்படையில் விசாரணை நடந்து வருவது பற்றியும் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது.

11. எதிரி கல்லாடா கிராமத்தை சேர்ந்தவர் என்றால், சரிதான். என் மனைவியும் கல்லாடா கிராமத்தை சேர்ந்த குமார் என்பவரின் மனைவியும் சகோதரிகள் என்றால், சரிதான். குமார் என்பவருடன் பணம் கொடுக்கல் வாங்கல் உள்ளதா என்றால், இல்லை. காணாமல் போன காசோலை எதிரியும் குமாரும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் குமாருக்கு கிடைத்திருக்க வாய்ப்பிருக்கிறது, அதனை பயன்படுத்தி என்னை வைத்து பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால், அது தவறு. என் மனைவி சகோதரியின் கணவர் குமார் குடும்பத்தை கந்துவட்டி தொழில் செய்வதாக போலிசார் வந்து விசாரித்தார்களா என்றால், எனக்கு தெரியாது. காசோலையில் உள்ள எதிரியினுடைய கையொப்பம் எதிரி மறுப்பதால் அந்த கையெழுத்து எதிரியினுடையதுதான் என்று என்னால் நிரூபிக்க முடியுமா என்றால், முடியாது.

12. காசோலையில் உள்ள கையெழுத்து என்னுடையது

இல்லை எதிரி அதனை நிரூபிக்கும் சமயத்தில் அதற்கு எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால், கிடையாது. என்னிடம் பணம் வாங்கும்போது தனது வங்கியில் 05.12.2021ம் தேதி வங்கியில் செலுத்தி பணமாக்கி கொள்ளலாம் என்று எதிரி சொல்லவில்லை என்றால், தவறு சொல்லியுள்ளார். சட்ட அறிவிப்புகள் இரண்டும் எதிரிக்கு சர்வ் ஆகவில்லை என்றால், சரியல்ல. நான் பணம் கொடுத்ததாக சொல்லும் நிலையில் காசோலை தேதியில் எனக்கு பணம் தேவைப்படாததால் நான் அன்றே வசூலுக்கு தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான்.

13. காசோலை தாக்கல் செய்த தேதியில் எதிரிக்கு தொடர்புகொண்டு எதிரியிடம் பணம் உள்ளதா என்று விசாரித்தேனா என்றால், இல்லை. எதிரிக்கும் எனக்கும் எந்த நேரடியான தொடர்பும் கிடையாது, எதிரி என்னிடம் எந்த பணமும் வாங்கவில்லை, காசோலையும் கொடுக்கவில்லை என்றால், தவறு. எதிரியின் கையொப்பத்தை போலியாக போட்டு என்னை பினாமியாக வைத்து போலி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால், அது தவறு. காசோலையில் உள்ள கையொப்பம் எதிரியினுடையது இல்லை என்று நிரூபிக்கும் பட்சத்தில் நான் பொய் வழக்கு போட்டுள்ளேன் என்று நான் ஒத்துக்கொள்வேனா என்றால், ஒத்துக்கொள்ளமாட்டேன்.

14. ஏனெனில் காசோலையில் உள்ள கையொப்பம் எதிரியினுடையது இல்லை என்று எனக்கு தெரியும் என்றால், அது தவறு.

எதிரியினுடைய கையொப்பத்தை போர்ஜரி செய்து போட்டு பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளதால், எதிரி என் மீது மோசடி வழக்கு தாக்கல் செய்ய தயாராக உள்ளார் என்றால், சரியல்ல.

**Taken down by/before me in open court road over/ interpreted to the witness in the presence of the accused/ accused's pleader and admitted by the witness to be correct.**

**Judicial Magistrate,**
**Kotagiri.**